**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : மலர்விழி**

**தேதி 10.07.2025 நேரம் மாலை 6.10 மணி**

---

*தலைப்புச் செய்திகள்*

பிரதமர் திரு நரேந்திர மோடி, கானா, பிரேசில், நமிபியா உள்ளிட்ட 5 நாடுகளுக்கான பயணத்தை வெற்றிகரமாக முடித்துக் கொண்டு தாயகம் திரும்பி உள்ளார்.

வங்கி அல்லாத நிதி நிறுவனங்களின் கடன் வசூல் நடவடிக்கைகள், முற்றிலும் ரிசர்வ் வங்கி விதிமுறைப்படி அமைய வேண்டும் என, மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

புதுச்சேரியில், பிஜேபி மேலிட பொறுப்பாளர் திரு நிர்மல் குமார் சுரானா, இன்று முதலமைச்சர் திரு ரங்கசாமியை சந்தித்து பேசினார்.

தேர்தலை எதிர் கொள்வதற்கான பணிகள் குறித்து தாங்கள் பேசியதாக, திரு சுரானா, திரு ரங்கசாமி ஆகிய இரு தலைவர்களும் தெரிவித்துள்ளனர்.

*மோடி பயணம் 1* (8)

பிரதமர் திரு நரேந்திர மோடி, கானா, டிரினிடாட்-டொபாகோ, அர்ஜெண்டினா, பிரேசில், நமிபியா ஆகிய 5 நாடுகளுக்கான பயணத்தை வெற்றிகரமாக முடித்துக் கொண்டு தாயகம் திரும்பி உள்ளார். தெற்குலக நாடுகள், மற்றும், அட்லாண்டிக் பெருங்கடலின் இருபுறமும் அமைந்துள்ள நாடுகள் உடனான இந்தியாவின் உறவுகளை வலுப்படுத்தி, பிரிக்ஸ், ஆப்ரிக்க யூனியன், ECOWAS, CARICOM உள்ளிட்ட பலதரப்பு அமைப்புகளில் இந்தியாவின் ஈடுபாட்டை ஆழப்படுத்தும் நோக்கத்துடன் இப்பயணங்கள் மேற்கொள்ளப் பட்டன. பிரதமரின் வெளிநாட்டு பயணம் குறித்து கூடுதல் விவரங்கள்........

(வாய்ஸ்“)

*மோடி பயணம் 2* (17)

**(வாய்ஸ்)**

5 நாடுகள் பயணத்தின் முதல் கட்டமாக, பிரதமர் திரு நரேந்திர மோடி கானா சென்றபோது, அந்நாட்டின் மிக உயரிய **ஸ்டார் ஆப் கானா** விருது அவருக்கு வழங்கப்பட்டது. 30 ஆண்டு இடைவெளிக்கு பின்னர், இந்திய பிரதமர் ஒருவர் கானா விற்கு மேற்கொள்ளும் முதல் பயணமாக இப்பயணம் அமைந்தது.

பயணத்தின் 2 ஆம் கட்டத்தில், பிரதமர் **டிரினிடாட்** சென்றபோது, **அந்நாட்டின் மிக உயரிய சிவிலியன் விருது**, அவருக்கு வழங்கப்பட்டது. வெளிநாட்டு தலைவர் ஒருவருக்கு டிரினிடாட் அரசால் இந்த விருது வழங்கப்படுவது, இதுவே முதன் முறையாகும். பயணத்தின் மூன்றாவது கட்டத்தில் பிரதமர் திரு நரேந்திர மோடி அர்ஜெண்டினா சென்று, முக்கியத் துறைகளில் இருதரப்பு உறவுகளை வலுப்படுத்திக் கொள்வது குறித்து அர்ஜெண்டினா அதிபருடன் பேச்சுவார்த்தை நடத்தினார்.

பயணத்தின் நான்காவது கட்டத்தில், பிரதமர் திரு நரேந்திர மோடி பிரேசில் நாட்டின் **ரியோ-டி-ஜெனிரோ** நகரில், 17-ஆவது **பிரிக்ஸ்** உச்சி மாநாட்டில் கலந்து கொண்டார். தொடர்ந்து **பிரேசிலியா** நகரில், **பிரேசில் அதிபரை** அவர் சந்தித்து, இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்தினார். பிரேசில் நாட்டின் மிக உயரிய சிவிலியன் விருதான **சதர்ன் கிராஸ் கிராண்ட் காலர்** விருது, பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு வழங்கப்பட்டது.

*மோடி பயணம் 3* (5)

5 நாடுகள் பயணத்தின் இறுதிக் கட்டத்தில், பிரதமர் திரு நரேந்திர மோடி, **நமீபியா** சென்றபோது, அந்நாட்டு அரசின் மிக உயரிய சிவிலியன் விருதான **வெல்விட்சியா மிராபிலிஸ்** விருது, அவருக்கு வழங்கப் பட்டது. இந்த விருதை பெற்றுள்ள முதலாவது **இந்தியத் தலைவர்**, பிரதமர் திரு நரேந்திர மோடி தான் என்பதும் குறிப்பிடத் தக்கது.

*பிஜேபி மோடி* (13)

பிரதமர் திரு நரேந்திர மோடியின் வெற்றிகரமான **5 நாடுகள் பயணத்தில்**, இந்தியா **முக்கியமான சாதனைகளை** எட்டி இருப்பதாக, பிஜேபி கூறியுள்ளது. அக்கட்சியின் செய்தித் தொடர்பாளர் திரு **சுதான்சு திரிவேதி**, புதுடெல்லியில், இன்று இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசுகையில், தீவிரவாதப் பிரச்சனைக்கு தீர்வு காண வேண்டியதன் அவசியம் குறித்து, பிரிக்ஸ் உச்சி மாநாட்டின் போது, உலக ஒப்புதலைப் பிரதமர் நிறுவி இருப்பதாக கூறினார். இயற்கை ஆதாரங்கள் மற்றும் அபூர்வக் கனிமங்கள் அதிகம் உள்ள நாடுகளான, கானா மற்றும் நமீபியா-வுடன், இந்தியா, உடன்பாடுகளை எட்டி இருப்பதாகவும், திரு திரிவேதி கூறினார். **பிரிக்ஸ்**, குவாட் ஆகிய இரண்டு கூட்டமைப்புகளிலும் இடம் பெற்றுள்ள ஒரே நாடு இந்தியா தான் என்றும், இந்தியாவின் **வெளியுறவுக் கொள்கை**, புதிய அத்தியாயத்தை எட்டி இருப்பதற்கு, இதுவே சான்றாகும் என்றும், அவர் மேலும் குறிப்பிட்டார்.

*தன்கர்* (18)

குடியரசுத் துணைத் தலைவர் திரு. ஜெக்தீப் தன்கர் இன்று புதுடெல்லியில், ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகத்தின் முதலாவது, வருடாந்திர, கல்வியியல் மாநாட்டை தொடக்கி வைத்தார். ஐரோப்பாவில் பல்கலைக் கழகங்கள் தோன்றுவதற்கு பல காலம் முன்பிருந்தே, இந்தியாவில் பல்கலைக் கழகங்கள், அறிவுக் கேந்திரங்களாக, சிறப்பான முறையில் செயல்பட்டு வந்திருப்பதாக, அவர் தமது உரையில் கூறினார். பழங்கால இந்தியாவின் **தக்ஷசீலா, நலந்தா, விக்ரம்சீலா** போன்ற பல்கலைக் கழகங்கள், **அறிவுசார் வாழ்க்கையின்** ஒளிரும் மையங்களாகவே திகழ்ந்ததாக அவர் குறிப்பிட்டார். **அறிவுக் கடலாகவே** விளங்கிய இப் பல்கலைக் கழகங்களில், **பல்லாயிரம் ஓலைச் சுவடிகள்** அடங்கிய நூலகங்களும், இருந்ததாக அவர் கூறினார். மத்திய **ஆயுஷ்** அமைச்சகத்தின் ஒத்துழைப்புடன், **இந்திய ஞான முறைகளின் எதிர்காலம்** என்ற தலைப்பில் ஏற்பாடு செய்யப் பட்டுள்ள இம்மாநாட்டின் தொடக்க

விழாவில், மத்திய அமைச்சர் திரு சர்பானந்த சோனோவால், ஜவகர்லால் நேரு பல்கலைக் கழக துணை வேந்தர் பேராசிரியர் சாந்திஸ்ரீ பண்டிட் உட்பட பலர் கலந்து கொண்டனர். இந்திய பாரம்பரிய ஞானத்தை, உலக அளவில் எடுத்துச் செல்லும் நோக்கத்திலான, இந்த 3 நாள் மாநாட்டில், 100 ஆய்வுக் கட்டுரைகள், 17 விவாத அமர்வுகள், மற்றும், வல்லுனர் உரைகள், இடம் பெறுகின்றன.

*நிர்மலா* (15)

வங்கி அல்லாத நிதி நிறுவனங்களின் கடன் வசூல் நடவடிக்கைகள் நியாயமான முறையில், கருணை மற்றும் மரியாதையுடன் மேற்கொள்ளப் பட வேண்டியதன் அவசியத்தை மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் வலியுறுத்தி உள்ளார். இதற்கான ரிசர்வ் வங்கியின் விதிமுறைகளை, நிதி நிறுவனங்கள் முழுமையாக கடைபிடிக்க வேண்டும் என்று அவர் இன்று புதுடெல்லியில், NBFC கருத்தரங்கில் பேசுகையில் கூறினார். விண்ணப்பதாரர்களின் நியாயமான தேவைகள் மற்றும் கடன் தீர்ப்பு திறன் அடிப்படையில் மட்டுமே, கடன் வழங்கப்பட வேண்டும் என்றும், அனைவருக்கும் நிதி வசதி என்பதை, நிதி சுரண்டலுக்கான சாக்காக மாற்றிவிடக் கூடாது என்றும், நிதியமைச்சர் குறிப்பிட்டார். கடன் வழங்கும் நிறுவனங்கள் தீவிர விளம்பரங்களை தவிர்க்க வேண்டும் என்றும், நியாயமான வட்டியில் மட்டுமே கடன் வழங்க வேண்டும் என்றும் அவர் கூறினார். வங்கி அல்லாத நிதி நிறுவனங்களின் நிர்வாக கொள்கையில், வாடிக்கையாளர் பாதுகாப்பிற்கு முக்கியத்துவம் அளித்தல் அவசியம் என்று நிதியமைச்சர் மேலும் வலியுறுத்தினார்.

*புதுச்சேரி சுரானா* 1 (18)

புதுச்சேரியில் பிஜேபி மேலிட பொறுப்பாளர் திரு நிர்மல் குமார் சுரானா, இன்று முதலமைச்சர் திரு ரங்கசாமியை அவரது இல்லத்தில் சந்தித்து பேசினார். பின்னர் முதலமைச்சர் திரு ரங்கசாமி செய்தியாளர்களிடம் பேசுகையில், 2026 ஆம் ஆண்டு தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி அமைப்பது குறித்து தாங்கள் ஆலோசித்து

வருவதாகவும், கூட்டணி மீண்டும் வெற்றி பெற்று ஆட்சி அமைக்கும் என்றும் கூறினார். எந்த அரசு இருந்தாலும், எந்த ஆளுநர் இருந்தாலும், மாநில அந்தஸ்து கிடைக்கும் வரை, **சில சில பிரச்சனைகள்** வரத்தான் செய்யும் என்றும், நிர்வாகத்தில் அதைப் பேசி, சரி செய்து கொள்ளலாம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பிஜேபி, தமக்கு ஒரு போதும் அழுத்தம் கொடுத்தது இல்லை என்று முதலமைச்சர் திரு ரங்கசாமி கூறினார். பிரதமர் எப்போதும் தம்முடன், நல்ல உறவில் தான் உள்ளதாகவும், தாம் காங்கிரஸ் கட்சியில் இருந்தபோதே, அவருடன் நட்புணர்வோடு பேசியது உண்டு என்றும் அவர் குறிப்பிட்டார்.

மக்கள், தேர்தல் மூலம் தங்களை தேர்ந்தெடுத்து இருப்பதாக குறிப்பிட்ட அவர், பாரதிய ஜனதா கூட்டணியில் இருந்து தாங்கள் வெளியேறும் சூழ்நிலை இல்லை என்றும், 2026 ஆம் ஆண்டு தேர்தல் வரை, நடப்பு அரசு, மக்களுக்கு, தொடர்ந்து சேவையாற்றும் என்றும் கூறினார்.

***புதுச்சேரி சுரானா*** 2 (5)

மாநில அந்தஸ்து குறித்து சட்டமன்றத்தை கூட்டி விவாதிக்கப்படும் என்றும், அனைத்து கட்சியினரும் மாநில அந்தஸ்தை வலியுறுத்த வேண்டும் என்றும் திரு ரங்கசாமி கூறினார். இது தொடர்பாக **பிரதமரை எப்போது வேண்டுமானாலும் சந்திப்போம்** என்று அவர் குறிப்பிட்டார். ரங்கசாமி-சுரானா சந்திப்பு குறித்து கூடுதல் விவரங்கள்.......

**(வாய்ஸ்)**

*புதுச்சேரி சுரானா* 3 (10)

**(வாய்ஸ்)**

பிஜேபி மேலிட பொறுப்பாளர் திரு நிர்மல் குமார் சுரானா முதலமைச்சர் திரு ரங்கசாமியை சந்தித்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில், தேர்தலை எதிர் கொள்வதற்கான பணிகள் குறித்து தாங்கள் பேசியதாக தெரிவித்தார். குடும்பத்தை போல நிர்வாகத்திலும் சில

பிரச்சனைகள் வரத்தான் செய்யும் என்றும், அதை பேசித் தீர்த்துக் கொள்ளலாம் என்றும் அவர் கூறினார். அமைச்சர் பதவியில் இருந்து திரு சாய் சரவணன்குமார் ராஜினாமா செய்துள்ள நிலையில், புதிய அமைச்சர் விரைவில் பதவி ஏற்பார் என்றும் திரு சுரானா தெரிவித்தார். கூட்டணியில் சேர வேறு கட்சிகள் முன்வந்தால் பரிசீலக்கப்படும் என்றும், தொகுதிப் பங்கீடு குறித்து தேர்தல் அறிவிப்பு வந்தவுடன் முடிவு செய்யப்படும் என்றும் அவர் கூறினார்.

*புதுச்சேரி சுரானா* 4 (5)

இதற்கிடையே, மேட்டுப்பாளையம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்ட, துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதனிடம், **முதலமைச்சருக்கும், தங்களுக்கும் இடையே கருத்து வேறுபாடு உள்ளதா** என்று செய்தியாளர்கள் கேட்டதற்கு, தமக்கு அப்படி ஒன்றும் தோன்றவில்லை என்று அவர் பதிலளித்தார்.

*கைலாஷ்நாதன்* (16)

புதுச்சேரியில் சுகாதாரத் துறை சார்பில், மேட்டுப்பாளையம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் காசநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் சத்துணவு பைகளை வழங்கினார். காசநோய் இல்லாத இந்தியாவை உருவாக்குவதற்கான பிரதமரின் திட்டத்தை புதுச்சேரி அரசு சிறப்பான முறையில் அமல்படுத்தி பாராட்டு பெற்றுள்ளதாக அவர் தமது உரையில் கூறினார். புதுச்சேரியில் ஒரு சில இடங்களில் இளம் பெண்களும் காசநோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரியவந்திருப்பதால், இந்நோயை முற்றிலும் ஒழிப்பதற்கான நடவடிக்கைகளை சுகாதாரத்துறை துரிதமாக்க வேண்டும் என அவர் வலியுறுத்தினார். காசநோய்க்கு எதிரான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை அதிகம் நடத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். நிகழ்ச்சிக்கு வந்திருந்த நோயாளிகளிடம், நோயின்

தன்மை, சிகிச்சை முறைகள் மற்றும் மருத்துவ வசதிகள் குறித்து துணை நிலை ஆளுநர் கலந்துரையாடினார். சுகாதாரத் துறை இயக்குநர் டாக்டர் செவ்வேள் உள்ளிட்ட அதிகாரிகளும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

*வானொலி நாடகம்* (11)

புதுச்சேரி ஆகாஷ்வாணி நிலையத்தில் ஒலிபரப்பாகும் வானொலி நாடகங்களில் பங்கு பெற, **நடிப்புத் திறன் தேர்வு** நடைபெற உள்ளது. புதுச்சேரி, கடலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி மாவட்டங்கள், திருவண்ணாமலை வட்டம், மற்றும், காரைக்கால் பகுதிகளை சேர்ந்தவர்கள் மட்டுமே இதற்கு விண்ணப்பிக்கலாம். விண்ணப்பக் கட்டணமாக, 18 வயதிற்கு மேற்பட்டவர்கள் 295 ரூபாய்க்கும், 18 வயதிற்கு உட்பட்டவர்கள் 236 ரூபாய்க்கும், Drawing & Disbursing Officer, Akashvani, Chennai என்ற பெயரில் மணியார்டர் ரசீது பெற்று வந்து, கோரிமேடு இந்திராநகரில் உள்ள ஆகாஷ்வாணி நிலையத்தில், விண்ணப்ப படிவத்தை பெற்றுக் கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வந்து சேர, நாளை, ஜுலை 11ஆம் தேதி கடைசி நாளாகும்.

*வானிலை* (8)

மேற்கு திசைக் காற்றின் வேக மாறுபாடு காரணமாக, இன்றும், நாளையும், தமிழகத்தில் ஓரிரு இடங்கள், மற்றும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில், லேசானது முதல், மிதமான மழை பெய்யக் கூடும் என, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. நாளை வரை, ஒருசில இடங்களில் அதிகபட்ச வெப்பநிலை, இயல்பை விட 2 முதல், 4 டிகிரி செல்சியஸ் அதிகமாக பதிவாகலாம் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது. இதற்கிடையே கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக, மகாபலிபுரத்தில் 3 செ.மீ மழை பதிவாகி உள்ளது.

கிரிக்கெட் (5)

இந்தியா-இங்கிலாந்து அணிகளுக்கு இடையே லண்டனில் இன்று தொடங்கி உள்ள 3 ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில், டாஸ் ஜெயித்து, முதலில் ஆடும் இங்கிலாந்து அணி, பகல் உணவு இடைவேளை வரை, ------- விக்கெட் இழப்பிற்கு, ----------- ரன் எடுத்திருந்தது. 5 போட்டிகளை கொண்ட இத்தொடரில் தற்போது இரு அணிகளும் தலா 1 போட்டியில் வெற்றி பெற்று சமநிலையில் உள்ளன.

*அமர்நாத் யாத்திரை* (6)

ஜம்மு-காஷ்மீரில் 38 நாள் அமர்நாத் யாத்திரை தொடரும் நிலையில், ஜம்மு பகவதி நகர் முகாமில் இருந்து மேலும் 7 ஆயிரத்து 300 பயணிகள், 284 வாகனங்களில், காஷ்மீர் பள்ளத்தாக்கு பகுதிக்கு புறப்பட்டு சென்றுள்ளனர். தெற்கு காஷ்மீரில் இமயமலையில் அமைந்துள்ள அமர்நாத் குகை கோவிலில், இவ்வாண்டு இதுவரை, 1 லட்சத்து 28 ஆயிரம் பேர் தரிசனம் செய்து இருப்பதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.